REGD. No. M. 6311 ✶ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: தை 7உ வியாழன் (20—1—55) ★ ★ வெளியூர்: தை 8உ வெள்ளி (21—1—55) [இதழ் 187

கிராம மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு

பீடார் நகருக்கு அருகே 5 மைல் தூரத்திலுள்ள கூனவாலி என்னும் கிராம மக்கள் தங்கள் கிராமத்தை அழித்துவிட்டு புதிய முறையில் திருத்தியமைத்தார்களாம். சர்க்காரின் உதவியின்றி மக்கள் தங்களுக்குத் தாங்களே எப்படி உதவி செய்துகொள்வது என்பதை இச்சம்பவம் எடுத்துக்காட்டுகிறது என்று சொல்லப்படுகிறது.

அவர்கள் கிராமம் மிகவும் மோசமாக இருந்ததாம். கிராமத்திலுள்ள கட்டிடங்கள் உட்பட எல்லாவற்றையும் கிராம மக்கள் அழித்துவிட்டார்களாம். 29 நாட்களுக்குள் கிராமத்தில் புதிய சாலைகள், கிணறுகள், மருத்துவ விடுதிகள், கட்டிடங்கள் உட்பட அனைத்தையும் புதிய முறையில் மீண்டும் கட்டி முடித்துவிட்டார்கள்.

ஆவடி காங்கிரசில் வடவரின் கலக்கம்!

திராவிட நாடு பிரிவினை கோரிக்கையை எதிர்த்துத் தீர்மானம்!

தூற்றிய கோமான்கள் கெஞ்சுகின்ற பரிதாபம்!

தேச ஐக்கியத்தைக் காப்பாற்ற 'கனம்'கள் முயற்சி

திராவிட இயக்கத்தை அழிக்கக் காங்கிரஸ் மூலபலம் தேடுகிறது

திராவிடர்கள் ஒரு காலத்தில் உலகம் வியக்க வளமுற வாழ்ந்து, இடையில், வந்தாரை எல்லாம் வாழ்விக்கும் வான்கருணை நெஞ்சத்தால்—மாற்றாரின் வஞ்சத்தால் விழ்ந்து இன்று மீண்டும் "திராவிடர் என்றொரு இனமுண்டு; அவர்களுக்கென்றொரு நாடும், நாகரீகமும், நானாவித கலைகளும் உண்டு; நாடாண்ட பரம்பரையினர் என்பதற்கான வரலாற்றுச் சான்றுகளுமுண்டு; நாங்கள் என்றும், எவராலும் ஆளப்பட்டதில்லை; மாறாக, நாடாண்டிருக்கிறோம்; ஆணவக்காரரின் கொட்டத்தை அடக்கியிருக்கிறோம்; ஆகவே, இன்றும், யாரும் எங்களை அடக்கி ஆள அனுமதியோம்; 'ஆளப்படுகிறோம்' எனும் அவச் சொல்லைத் துடைக்கச் சமர் புரிந்து சவமாகவும் தயங்கோம்," என்று சூளுரைத்து 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று விடுதலைக் குரலெழுப்பி, அடிமைத் தளையறுக்க துடிதுடித்துக் கிடக்கிறது, திராவிடர் இனம்! அந்த உரிமைக் குரல் நாளுக்குநாள் வலுத்துவருவது நாடறிந்த உண்மையாகும்.

அந்த உரிமைக் குரலின் பின்னால் ஒரு மாபெரும் இனத்தின் நிரந்தரமான விடுதலையும், பெருமை மிகுந்த நல்வாழ்வும் அடங்கிக் கிடக்கின்றன என்ற உண்மையை மறைத்துவிட முயற்சிப்போர் ஏராளமான பேருண்டு.

அந்த உரிமைக் குரலை அதிகாரத்தால், அடக்குமுறையால் அழித்துவிட நினைத்தவர்களும், நினைத்துக்கொண்டிருப்பவர்களும் எண்ணற்றோர்!

'தனி நாடு வேண்டும் என்கிறார்கள் நாசகாலர்கள்—நாட்டைப் பிரிக்க எண்ணுகிறார்கள்; அடுக்குமா—வாழ்வார்களா இவர்கள்' என்று பேசினார்கள்.

நமக்கென்று ஒரு தனி நாடு வேண்டும் என்று நாம் சொன்னபோது, சொல்லம்பு வீசியோரும், தேசத்தின் புனிதம் கெட்டுவிடும் என்று சீறினோரும், இன்று, குரல் கம்மிப்போய் நிற்கிறார்கள்.

நாஸ்திகர்கள்—கடவுளை மறுக்கும் காதகர்கள்—பாரத மாதாவைப் பழிப்பவர்கள்—என்று ஏசினார்கள் ஒருகாலத்தில்! பின்னர், திராவிட இயக்கச் செய்திகளை இருட்டடிப்பு செய்தார்கள்; நமது பிரிவினை கீதத்தை காங்கிரசும், அதனைத் தாங்கி நிற்கும் முதலாளித்துவமும் ஒரேமூச்சாக எதிர்த்தன, எதிர்க்கின்றது; ஆனால், திராவிட நாடு பிரிவினை கோரிக்கையோ, வலுத்துவிட்டது! விடுதலை கீதம் ஏகாதிபத்தியவாதிகளின் மிரட்டலால்—கொடூர மொழியால் அடங்கிவிடக்கூடியது அல்ல என்பதை உணர்ந்துகொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது!

நமது உரிமைக் குரல் இந்த மாபெரும் துணைக்கண்டத்தின் ஆட்சிப் பொறுப்பை பல மாநிலங்களிலும் டெல்லியிலும் ஏற்று நிற்கும் தேசியத் திருச்சபையான அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியினை கலக்கிவிட்டிருக்கிறது.

ஏசிப்பேசி ஏளனம் செய்தே, 'ஏக இந்தியாவை' நிலைநிறுத்திவிட எத்தனிக்கும் காங்கிரஸ் மூலவர்கள் இன்று திராவிடத்தின் உரிமைக் குரலின் வலுவால் கலங்கி நிற்கிறார்கள்.

ஆவடியில் நடைபெற்று வரும் அகில இந்தியக் காங்கிரசின் 60-வது மாநாட்டில், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற உரிமைக் குரல் பற்றி காரசாரமான பேச்சுக்கள் நிகழ்ந்திருக்கின்றன.

"நாட்டின் ஒற்றுமையும், ஐக்கியமும்" என்ற தலைப்பில் இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள பிரிவினைச் சக்திகளைக் கண்டித்து, தீர்மானம் ஒன்று கொண்டு வந்திருக்கிறார்கள்.

'இந்தியாவின் ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் குலைக்கும் எந்த இயக்கத்தையும் மக்கள் ஆதரிக்கக்கூடாது' என்று தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய பண்டித கோவிந்த வல்லப பந்த் கூறியிருக்கிறார்.

தீர்மானத்தை வழிமொழிந்து பேசிய எம். ஏ. அனந்தசயனம் அய்யங்கார், "திராவிட நாடு திராவிடருக்கே எனும் கூச்சல் அர்த்தமற்றது" என்று சாடியிருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க.)

தமிழில் பேசினதும் எழுந்து ஓடினார்களாம் இந்தி வெறியர்கள்!

ஆவடி காங்கிரஸ் தமிழர்களை அவமதிப்பது கண்டு காங்கிரஸ் பக்தர்கள் கலக்கம்

சென்னை, ஜன. 20—

ஆவடியில் நடைபெறும் காங்கிரஸ் மாநாட்டில் வடநாட்டுத் தலைவர்கள் இந்தி மொழியிலேயே பேசுகிறார்கள்; மாநாட்டில் கூடியிருக்கும் தமிழ் நாட்டு காங்கிரஸ்வாதிகள், வடநாட்டினர் பேசுவது புரியாவிட்டாலும் அடங்கி ஒடுங்கி அப்படியே அசையாது உட்கார்ந்திருக்கிறார்களாம்; காங்கிரசின் மீதுள்ள பக்தியே இதற்குக் காரணமாக இருக்கலாம்; அல்லது, 'தமிழ் நாட்டிற்கு வந்துள்ள விருந்தினரை மதிப்போம்' என்ற நல்ல பண்பின் காரணமாகக்கூட அவர்கள், அசையாது உட்கார்ந்திருக்கலாம்!

ஆனால், வடவர்கள் தங்கள் மொழி வெறியைக் காட்டிவிட்டனர். நேற்று பொருளாதாரக் கொள்கை பற்றி பண்டித நேரு 45 நிமிட நேரம் இந்தியில் பேசினாராம்; தமிழ் நாட்டு காங்கிரஸ் தொண்டர்கள் அசையாது அமர்ந்திருந்தார்களாம்.

பண்டித நேரு பேசி முடிந்தவுடன், அடுத்து, தமிழ் நாடு காங்கிரசைச் சேர்ந்த ஆர். வெங்கட்ராமன் தமிழிலேயே பேசினாராம்; அவர் தமிழில் பேச ஆரம்பித்ததும், மாநாட்டில் அமர்ந்திருந்த வடநாட்டினர், ஒரே கும்பலாக எழுந்து, சத்தமிட்டுக் கொண்டு சென்றார்களாம்.

மாநாடு ஒரே கூச்சல் மயமானதைக் கண்ட புதிய தலைவர் தேபர்,—எழுந்து போகும் வடநாட்டு இந்தி வெறியர்களைப் பார்த்து, "எழுந்து போக வேண்டுமென்றால் போங்கள்; ஆனால், சத்தம் போடாமல் செல்லுங்கள்" என்று கேட்டுக் கொண்டாராம்!

இந்தி வெறியர்கள் தமிழில் பேசும்போது எழுந்து செல்வதையும், இந்தியில் பேசும்போது தமிழ் காங்கிரஸ் தொண்டர்கள் பயபக்தியுடன் உட்கார்ந்திருப்பதையும் கண்ட நல்ல மனம் படைத்த காங்கிரஸ் தமிழர்கள் வேதனைப்பட்டார்களாம்!

வடவர் பண்பு இப்படி இருக்கிறது! தமிழரின் காங்கிரஸ் பக்தி, அப்படி இருக்கிறது!

கொள்ளைக்காரன் பிடிபட்டான்!

ஜோத்பூர், ஜன. 19—

இங்குள்ள பெரிய கொள்ளைக்காரனான குந்தன்சிங் என்பவன் பிடிபட்டுவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன. அவனைப் பிடித்துக் கொடுத்தாலும், அல்லது கொன்றாலும் அவர்களுக்குப் பரிசு கொடுப்பதாக சர்க்கார் ஏற்கனவே அறிவித்திருந்தது குறிப்பிடத் தக்கது.

நேருவின் சோஷலிசத் திட்டம்— காந்தியின் சர்வோதய திட்டத்திற்கு மாறுபட்டதாகும்!

'ஏட்டளவுத் திட்டம்' ஏற்றதல்ல; 'செயலாற்றும் திட்டம்' நாட்டிற்குத் தேவை!

காங்கிரஸ் பொருளாதாரக் கொள்கைக்குப் பலர் எதிர்ப்பு

சென்னை, ஜன. 19—

பண்டித நேருவினால் பேசப்படும் சோஷலிசத் திட்டத்தை இந்தியாவின் கொள்கையாக்க ஆவடி காங்கிரசில் தீர்மானம் வந்தபோது, பலர் அத்திட்டத்தை எதிர்த்ததுடன், 'காந்தீய முறைகளை காங்கிரஸ் அலட்சியப்படுத்துகிறது' என்றும் எடுத்துக்காட்டினார்களாம்.

"காந்தியினால் ஆதரிக்கப்பட்டு முன்மொழியப்பட்ட, சர்வோதய முறையையும், காந்தீயப் பொருளாதாரத் திட்டத்தையும் காங்கிரஸ் கைகழுவி வருகிறது. நமக்கென்று—நமது தேவைகளுக்கென்று ஒரு சமூக அமைப்பு இருக்கிறது; சோஷலிச சமுதாய அமைப்பு என்பது சமூகத்தினிடையேயிருந்து உருவானதல்ல; அது, மேலிடத்திலிருந்து நம்மீது திணிக்கப்படுகிறது."

என்று ராஜஸ்தானைச் சேர்ந்த கோகல்பாய் பட் என்பவர் கூறினார்.

"மரண வரி, குறைந்த கூலிக் கானசட்டம் இவைபோன்றவை பலன் தர நீண்ட காலமாகும்; பார்வைக்கு மட்டும் சிறப்பானதாகக் காணப்படாமல், நடைமுறையிலும் சிறப்புடைய பொருளாதாரத் திட்டத்தை சர்க்கார் வகுக்கவேண்டும்; இந்திய சர்க்கார் நிதி அமைச்சர் தொழில் துறைகளைப் புதிதாக உருவாக்கக் கொண்டுவந்துள்ள திட்டம் வரவேற்கத் தக்கது; ஆனால், இப்போது வேலையின்றி இருப்போருக்கு வழி என்ன? 10 ஆண்டுகளில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்துவிட நிதி அமைச்சர் கொண்டு வந்திருக்கும் பிரமாதமான திட்டம் நிறைவேறும்வரை அவர்கள் என்ன செய்வது? தீர்மானம், உற்பத்தி சாதனங்கள் நாட்டின் சொத்தாக இருக்க வேண்டுமென்று கூறுகிறதேயன்றி, அவைகளின் நிர்வாகம் சர்க்காரிடம் இருக்க வேண்டுமென்று கூறவில்லையே! உற்பத்தி சாதனங்கள் சர்க்காரின் சொத்தாக வேண்டும்; அதன் நிர்வாகம் தனிப்பட்டவர்களிடம் இல்லாது சர்க்காரிடமே இருக்க வேண்டும்"

என்று வி. என். காட்கில் கூறினார்.

"சோஷலிச சமுதாயம் என்பதைப் பற்றி காங்கிரஸ் தொண்டர்களுக்குச் சொல்லிப் பயன் இல்லை; சோஷலிச அமைப்பு என்றால் என்ன

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 20—1—1955 வியாழன்

போர்ப் பயிற்சிக்கூடத்தில்!

ஒரு சிறந்த இராணுவத்தின் முக்கியத் தேவைகளாக உள்ளவை, தரைப் படை—கடற் படை—விமானப் படை என வரையறுக்கப்பட்டுள்ளன. இம்முப்பெரும் படைக்கும் வேண்டப்படும் அதிகாரிகளைப் பயிற்றுவிப்பதற்காக, பூனுவிலிருந்து பன்னிரண்டு கல் தொலைவில் இருக்கும் கடக்வாசலாவில் ஒரு புதிய இராணுவப் பயிற்சிக் கல்லூரி துவங்கப்பட்டு இருக்கிறது. சயாத்திரி குன்றின் அடிவாரத்தில் முத்தா பள்ளத்தாக்கின் மேற்குப் பகுதியில் 6,600 ஏகர் நிலப் பரப்பில், இப்புதிய கல்லூரி திறக்கப்பட்டு இருக்கிறது.

அக்கல்லூரி கட்டிடம் முழுவதும் 29 லட்ச ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு இருக்கிறது. அக்கட்டிடத்திற்குக் கால்கோல் விழா, பண்டித நேரு அவர்களால் 1949-ல் ஆற்றப்பட்டது. முடிந்த கட்டிடத்தை, பம்பாய் முதலமைச்சர் இத்திங்கள் 16-ந் தேதி திறந்து வைத்திருக்கிறார்.

இராணுவப் பயிற்சிக் கல்லூரி உள்ள கடக்வாசலாவில் தான், இருநூற்றாண்டு பீஷ்வா ஆட்சி நடைபெற்று வந்திருக்கிறது. புதிய கல்லூரியிலிருந்து பின்புறமாக நோக்கினால், மராட்டிய மாவீரன் சிவாஜியின் தளபதிகளில் ஒருவனான தானாஜி ராவ், முகலாயரை விரட்டியடித்துக் கைப்பற்றிய 2,300 அடி உயரத்தில் உள்ள சிங்காட் மலைக்கோட்டையின் சரிந்த சுவர்கள், மராட்டிய எழுச்சியையும் வீழ்ச்சியையும் உணர்த்திய வண்ணம் உள்ளன.

இரண்டாவது பெரும் போருக்கு நினைவுச் சின்னம் எழுப்பும் ஏற்பாடாக அமெரிக்காவில் உள்ள இராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி போன்ற ஒன்றை இந்தியத் துணைக்கண்டத்திலும் நிர்மாணிக்க வேண்டுமென, 1945-ல் அன்றிருந்த பிரிட்டிஷ் 'ஏகாதிபத்திய வெறியர்கள்' தீர்மானித்தனர். அமெரிக்காவில் இருக்கும் பயிற்சிக் கல்லூரிக்கும் கடக்வாசலாவில் துவங்கப்பட்டுள்ள கல்லூரிக்கும் பெருத்த அளவில் மாறுபாடு உண்டு. அதாவது, அமெரிக்க கல்லூரியில் தரைப்படை அதிகாரிகளுக்கான பயிற்சி மட்டுமே தரப்படுகிறது; ஆனால், கடக்வாசலா கல்லூரியோ, ஒரே காலத்தில் மூன்று இராணுவப் பிரிவுகளுக்கும் தேவைப்படும் அதிகாரிகளை உருவாக்கும் பயிற்சியை அளிக்கும் வசதி கொண்டதாக அமைக்கப்பட்டு இருக்கிறது.

இந்திய அரசாங்கத்தில் அன்று சேனாதிபதியாக இருந்த பீல்ட் மார்ஷல் சர் கிளாட் ஆகின்லெக் தலைமையில், புதிய இராணுவக் கல்லூரிக்கான விளக்கமான திட்டத்தைத் தீட்ட ஒரு குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் சார்பில், அமெரிக்கா, ஐரோப்பா, இங்கிலாந்து, கனடா, முதலிய இடங்களில் எவ்வாறு இராணுவப் பயிற்சிக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன என்பதைக் கண்டறிய நிபுணர்கள் அனுப்பப்பட்டனர். அக்குழுவின் விருப்பப்படி கடக்வாசலா கல்லூரி உயர்வு பெற்றிருக்கிறது.

கடக்வாசலா கல்லூரியின் தோற்றத்திற்கு எப்படி ஆங்கிலேய 'ஏகாதிபத்திய வெறியர்கள்' மூல மனிதர்களாக, இருந்தனரோ, அதேபோன்று, கல்லூரியை நிர்மாணிப்பதற்கான பெருந் தொகையைப் பெறுவதற்கும் அவர்களே காரணமாக இருந்திருக்கிறார்கள்.

இந்தியாவிற்கு வெளியில், மேற்குப் பாலைவனப் பகுதியில், இந்திய சிப்பாய்கள் காட்டிய மாவீரத்தைப்பாராட்டும் பண்பற்று, 'சோற்றுப் பட்டாளம்' எனப் பண்டிட் விஜயலட்சுமி அவர்களால் பழித்துக்கூறப்பட்ட அதே 'சோற்றுப் பட்டாளத்தின்' வீரப் பணிதான், கடக்வாசலா கல்லூரி எழுவதற்குச் செலவான பெருந் தொகையை ஈட்டிக்கொடுத்து இருக்கிறது. சொந்தச் சோதரர்களின்நெஞ்சுரத்தையும், பாலைவனத்தில் புலியெனப்பாய்ந்து போரிட்ட மாவீரத்தையும் அம்மையார்—எதிர்காலத்தை யூகித்து உணரும் அறிவாற்றல் துளியும் இல்லாது—நையாண்டி செய்த போதிலும், நமது போர்ப் படையினரின் அஞ்சா நெஞ்சையும், ஆற்றிய வீரப் பணியினையும், சூடான் நாடு பாராட்டிப் புகழ்ந்தது. இந்தியத் துருப்புகளின் வீரச் செயல்களுக்குப் பரிசு வழங்கவும் தீர்மானித்தது.

மேற்குப் பாலைவனப் போரில் இந்தியத் துருப்புகள் காட்டிய வீரத்திற்கு ஈடாக, இரண்டாவது பெரும் போருக்குச் சிறந்ததோர் நினைவுச் சின்னம் எழுப்ப, ஒரு லட்சம் பவுனை இந்தியாவிற்கு, தன்னிச்சையாக மனமுவந்து சூடான் நாடு கொடுத்தது. அத்தொகையில் பாகிஸ்தானுக்குப் பகிர்ந்து கொடுத்தது போக, எழுபதினாயிரம் பவுன் இந்தியாவிற்கு மிச்சமாகக் கிடைத்தது. அப்பெருந் தொகைதான் கடக்வாசலாவில் துவங்கியுள்ள கல்லூரிக்குச் செலவாகியுள்ள இருபத்தொன்பது இலட்ச ரூபாய்க்குமுதலீட்டுத் தொகையாயிற்று.

'சோற்றுப் பட்டாளம்'—பாலைவனப் போரில் அது காட்டிய வீரம்—கொட்டிய குருதி—கடக்வாசலா கல்லூரியாகக் காட்சியளிக்கிறது!

தரைப் படை, கடற் படை, விமானப் படை ஆகிய முப்பெரும் படையைத் திறம்பட நடத்துவதற்குத் தேவைப்படும் அதிகாரிகளுக்கு, அக்கல்லூரியில் மூன்றாண்டு காலத்திற்குப் பொதுப்படையான பயிற்சி அளிக்கப்படும். அதன் பிறகு, பொதுப் பயிற்சி பெற்ற அவர்கள், தங்களுக்கு விருப்பமான தனித் தனித் துறைகளில், அவைகளுக்குரிய இடங்களில் ஓராண்டு காலம் சிறப்புப் பயிற்சி பெற்றாக வேண்டும். விமானப் படையில் சேர விரும்புவோர் பங்களூர் பயிற்சிக் கல்லூரியிலும், கடற் படை பணி விரும்புவோர் கொச்சி கல்லூரியிலும் அதற்கான பயிற்சியினை ஓராண்டு காலம் பெறுவர்.

இராணுவத் துறைக்கு மட்டுமே தேவைப்படும் பொதுப் பயிற்சியோ சிறப்புப் பயிற்சியோ தருவதுடன் கடக்வாசலா கல்லூரி நின்றுவிடவில்லை. அங்கு, மற்றக் கலைக் கல்லூரிகளில் போதிக்கப்படும் அளவிற்கு, பொது அறிவை வளப்படுத்தும் பலதுறைக் கல்வி போதனைக்கும் ஏற்பாடு இருக்கிறது.

அங்கு சேர்க்கப்படும் மாணவர்களை, யூனியன் சர்விசு கமிஷன்தான் பொறுக்கி எடுக்கும். பொறுக்கி எடுக்கப்பட்ட மாணவர்களுக்கிடையி போட்டிப்பரீட்சையும் உண்டு. அதில் தேர்ந்தவர்களே கடக்வாசலா கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

அங்கு சேரும் மாணவர்களுக்கு வயது 15-லிருந்து, 17½-க்குள்ளாக இருக்க வேண்டும். படிப்பும் பத்தாவது தேறியவர்களாக இருக்க வேண்டும். மணமாகாதவர்களாகவும், மனைவியை இழந்த குழந்தைகள் இல்லாதவர்களாக உள்ளவர்களுக்கும் அங்கு சேர்ந்து கற்கும் வாய்ப்பு உண்டு.

கடக்வாசலா இராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி, 'சோற்றுப் பட்டாளத்'தின் வீரச் சேவையின் விளைவு!

சூடான் தந்த காணிக்கையைக் கடைக்காலாகக் கொண்டு எழும்பியுள்ள கலைக் கூடம்!

வெள்ளை 'ஏகாதிபத்திய வெறியர்'களின் மூளையில் கருக்கொண்டு, அவர்கள் முயற்சியால் உருப்பெற்று, காங்கிரஸ் ஆளவந்தார்களின் கருணை கடாட்சத்தால் கட்டிமுடிக்கப்பட்டு, கம்பீரமாகத் தோன்றி நிற்கும் கல்லூரி!

கட்டிடத்திற்கு முன்பாக, ஓங்கி உயர்ந்துள்ள ஒரு ஸ்தூபி! அதில் அசோகனின் தர்ம சக்கரம்! அதை அறை கூவும் வகையில், ஜாதிவெறி கொண்ட வில்லேந்திய கரத்துடன் விளங்கும் துரோணாச்சாரியின் கற்சிலை, கல்லூரி நுழைவு வாயிலில், அங்கு பயிற்சி பெற வரும் மாணவர்களை வரவேற்கக் காத்துக் கொண்டு இருக்கிறது!

கல்லூரியில் இடம் பெற முடியாமல் எதிர்காலத்தில் பலியாக இருக்கும் ஏகலைவர்களை முன்கூட்டி அறிவிக்கவோ என்னவோ, துரோணர் சிலையை அங்கு இந்தியப் பேரரசு நிர்மாணித்து இருக்கிறது! புதிய கல்லூரியை உருவாக்கினதில் இந்தியப் பேரரசின் பங்கு, துரோணாச்சாரியின் சிலையை நிலைநாட்டின ஒன்றே ஒன்று தான் என்பதை மக்களுக்கு உணர்த்தச் செய்யும் ஏற்பாடாக, அச்சிலை அமைப்பு இருந்தாலும் இருக்கக்கூடும்—யார் கண்டார்கள்?

கையெழுத்தாயிற்று

இவ்வாண்டில், அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு அளிக்கும் 447-லட்சம் டாலர் பொருளாதார உதவிக்கான மூன்று ஒப்பந்தங்களில் பாகிஸ்தானும் — அமெரிக்காவும் கையெழுத்திட்டுள்ளன.

பர்மா கரேன்களின் 'தனி நாடு' கிளர்ச்சி வலுக்கிறது

'ஆகஸ்டு' நடவடிக்கைகளில் தீவிரவாதிகள் ஈடுபட்டுள்ளனர்?

ரங்கூன், ஜன. 18—

பர்மாவில் தனி நாடு கோரிக்கையை லட்சியமாகக் கொண்டுள்ள கரேன்களின் கிளர்ச்சிகள் இப்போது வலுத்துவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

கரேன்களின் விடுதலை இயக்கத்திலிருக்கும் புரட்சிக்காரர்கள் பலர், துப்பாக்கிச் சண்டை, ரயில்களைச் சேதப்படுத்துதல் போன்ற காரியங்களில் ஈடுபட்டிருப்பதாயும் செய்திகள் கூறுகின்றன.

சுமார் 5 மணி நேரம் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 30 பிரயாணிகளும், இரு பாதுகாப்பாளர்களும் கொல்லப்பட்டிருப்பதாயும், இருபதுக்கும் அதிகமான பிரயாணிகள் பலத்த காயமடைந்ததாயும் அச்செய்திகள் மேலும் கூறுகின்றன.

மேலும், இராணுவ தளவாடங்கள், துப்பாக்கிக் குண்டுகள், ஆயுதங்கள் ஏற்றிச் சென்ற 'கூட்ஸ்' ரயிலும், தீவைக்கப்பட்டதாம்.

தந்திக்கம்பங்களை அறுத்தல், பாலங்களுக்குத் தீவைத்தல், தண்டவாளங்களைப் பெயர்த்தல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டனவாம்.

"மக்களுடன் பேச அனுமதிக்கவில்லை!"

கிழக்கு ஜெர்மனி சென்ற கலைஞர் தரும் செய்தி

அகமதாபாத், ஜன. 18—

நாட்டியத்தில் புகழ் பெற்ற திருமதி மிருணாளினி சாராபாய் என்பவர், சுமார் நான்கு மாதங்கள் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து திரும்பியிருக்கிறார். அவர் கிழக்கு ஜெர்மனிக்கும் சென்றிருக்கிறார்.

கிழக்கு ஜெர்மனியில், அவர்கள் அந்த நாட்டு மக்களுடன் பேசவே அனுமதிக்கப்படவில்லையாம்; கலாச்சாரம் பற்றி எவ்விதத் தொடர்பும் கொள்ளவில்லையாம்; அங்குள்ள ஜெர்மன் கலைஞர்களுடன் கலந்து பேச வேண்டுமென்று எத்தனையோ முறை கேட்டுக் கொண்டும், சர்க்கார், அவர்களுக்கு அனுமதி தரவில்லையாம்; ஒவ்வொரு தடவையும் ஏதாவது ஒரு காரணம் கூறி மறுத்துவிட்டார்களாம்.

அவர்கள் கிழக்கு பெர்லின் சென்றதும், அந்த நகரிலிருந்து 25 மைல் தூரத்தில் உள்ள ஒரு வீட்டில் தங்குமாறு செய்யப்பட்டார்களாம். அந்த வீட்டைச் சுற்றிலும் கம்பி போடப்பட்டிருந்ததாம். தெருவில் செல்லும் மக்களிடையே பேசக்கூடாது என்று சொல்லப்பட்டதாம்.

இந்தியக் கலைக் குழுவினருக்கு, கிழக்கு ஜெர்மன் சர்க்காரின் கலாச்சார இலாகா விருந்து ஒன்று அளித்ததாம்; இந்த விருந்தில், இந்திய கலைக் குழுவினரும், கிழக்கு ஜெர்மன் அமைச்சர் ஒருவரும்தான் இருந்தார்களாம்; வேறு யாருமே விருந்திற்கு அழைக்கப்படவில்லையாம்.

நல்ல பாம்பை கழுகு பாராட்டுகிற விந்தை!

லண்டன், ஜன. 18—

"இனப் பிரச்சினைக்கு மிகவும் சிறந்த முறையில்(?) பணியாற்றினார்" என்று தென் ஆப்பிரிக்காவில் உள்ள யூதர்கள் சமூகம் தென் ஆப்பிரிக்காவின் முன்னாள் பிரதமரான டாக்டர் மலானுக்கு தங்கள் சமூகத்தினர் அளிக்கும் உயர்ந்த கௌரவத்தை அளிக்க இருக்கின்றனர்.

ஜெருசலேத்தில் உள்ள 'கோல் ...னின் பெயர் பொறிக்கப்படுமாம்.

யூதர்கள் சமூகத்தினர் இந்த இடத்தில் யாருடைய பெயரை யாவது பொறித்தால், அவர்கள் அந்த மனிதரை மதிக்கிறார்கள் என்று பொருள்.

இச்செய்தியைக் கேள்விப்பட்ட பிரிட்டிஷ் யூதர் பிரதிநிதிகள் கழகத் தலைவர் டாக்டர் ஆபிரகாம் கோகன், 'இது ஒன்றும் மிகபெரிய கௌரவம் இல்லை,' என்றும், '20 கினியாக்கள் இதற்கென்று செலவிடப்படும்,' என்றும் கூறியுள்ளார்.

லண்டனில் உள்ள யூதர்கள் கழகமான முன்னாள் இராணுவத்தினர் கழகத் தலைவர், தன்னால் இச்செய்தியை நம்ப முடியவில்லை என்றும், மலான் இனப் பிரச்சினைக்கு சேவை செய்தார் என்பது கேலிக்கூத்து என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

யூதப் பெண்கள் கழகத் தலைவி ஹில்டா என்பவர், 'மலானைத் தேர்ந்தெடுத்தது மிகவும் அதிசயிக்கத்தக்க ஒன்று' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்திய நிபுணர் குழு மாஸ்கோ செல்லும்

60 லட்சம் டன் எஃகு தயாரிக்க இந்திய சர்க்கார் திட்டம்

சோவியத்தின் இரும்பு—எஃகுத் தொழில் பற்றிய உண்மைகளையும், அவைகள் அமைக்கப்பட்டிருக்கும் முறைகளையும் நேரில் கண்டறிந்து வர இந்திய தொழில் நிபுணர்கள் குழு ஒன்று மாஸ்கோவுக்குச் செல்லுமென்று தெரிகிறது.

மாஸ்கோ செல்லும் குழுவினர் திரும்பிவந்து தங்கள் அறிக்கையை தந்த பின்னர்தான் இந்திய சர்க்கார் இரும்புத் தொழிற்சாலை ஒன்றை அமைத்துத்தர ரஷ்யா முன்வந்திருப்பது பற்றி இறுதி முடிவு செய்யுமாம்.

இந்தியாவில் தங்கியுள்ள ரஷ்ய நிபுணர்கள் குழுவினர் தங்கள் அறிக்கையை இந்திய சர்க்காருக்குத் தந்துவிட்டனர் என்று தெரிகிறது.

எஃகுத் தொழிற்சாலை அமைப்பது பற்றி இதுவரை இந்திய சர்க்காருக்குத் தரப்பட்ட அறிக்கைகள் பலவற்றில் ரஷ்ய நிபுணர்கள் கொடுத்திருககும் அறிக்கை மிகவும் உயர்தரமாக இருக்கிறதாம்.

இப்பிரச்சினையில் சீக்கிரம் ஒரு முடிவு காண்பதற்காக இந்திய மந்திரி சபையில் உப-குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. இக்குழுவில், அமைச்சர்கள் கே. சி. ரெட்டி, டி. டி. கிருஷ்ணமாச்சாரி, சர்தார் சுவரண்சிங், சி. டி. தேஷ்முக், கே. சி. நியோகி ஆகியோர் உறுப்பினர்கள்.

இக்குழுவினர், ரஷ்யா, பிரிட்டன் ஆகிய நாடுகள் இரும்புத் தொழிற்சாலை பற்றி அளிக்க வந்திருக்கும் உதவி பற்றியும், டாட்டா கம்பெனியாரின் அபிவிருத்தித் திட்டம் பற்றியும் ஆலோசனை செய்வார்கள் என்று தெரிகிறது.

1960-ம் ஆண்டிற்குள், இந்தியாவில் 60 லட்சம் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட வேண்டுமென்று சர்க்கார் திட்டமிட்டிருக்கிறதாம்.

இத்திட்டத்தில், சோவியத்—பிரிட்டிஷ் உதவியுடன் நடத்தப்பட இருக்கும்திட்டங்கள், டாட்டாவின் திட்டம் ஆகியவைகள் அடங்கியுள்ளன; ரூர்கலா திட்டம் இக்கணக்கில் சேர்க்கப்படவில்லை.

கொழும்பு திட்டப்படி, பிரிட்டன் அளிக்கும் உதவிக்கு நிபுணர் குழு ஒன்று அனுப்பப்படும் என்று தெரிகிறது.

சோவியத்தின் உதவி பற்றி முடிவு செய்யப்பட்ட பின்னர்தான் இந்திய சர்க்கார் பிரிட்டிஷ் உதவி ... கிறது.

‘ஆரியம்’ கலந்த பின்னர்தான் திராவிடத்தில் ‘பஞ்சமாபாதகங்கள்’ வளர்ந்தன

மதுரை சமூக சீர்திருத்த மாநாட்டில்

தில்லை-வில்லாளன் திறப்புரை

“ ஆரியம், திராவிடத்தில் கலந்த பிறகுதான் பஞ்சமாபாதகம் என்று கூறப்படும் கொடுந்தொழில்களை மக்கள் சர்வ சாதாரணமாகச் செய்ய ஆரம்பித்தார்கள். ‘பொய் கூறுவது தவறில்லை’ என்று, நாரதர் மூலம் நாட்டில் பரப்பினர்; ‘திருடுவது திருவிளையாடல்’ என்று, கண்ணன் கதை மூலம் காட்டினர்; ‘சூதாடுவது நியாயம்’ என்று, பாரதக் கதை மூலம் பறைசாற்றினர்; ‘தருமரே சூதாடினர் —மனிதர்கள் சூதாடுவது தவறில்லை,’ என்று கூறும் நிலையை ஏற்படுத்தினர்; ‘கொலை — கடவுள்களே செய்திருக்கிறார்கள்’ என்று காட்டினர்.

“ விபசாரம்—விதவிதமான முறைகள் மூலம் நடைபெற வழிகாட்டப்பட்டது; இந்திரன் மாடல், முருகன் மாடல், சிவன் மாடல், மகாவிஷ்ணு மாடல், கிருஷ்ணன் மாடல் என்று முறைகள் கற்பிக்கப்பட்டன.

“ குடியும் அப்படித்தான்—சுராபானம், சோமரசம் என்றும், அதனை தேவர்களே குடித்தார்கள் என்றும் கூறி, மதுப்பழக்கத்தை வளர்த்தனர். இப்படி ஆரியம் சேர்ந்த பிறகுதான் இந்த அசம்பா விதங்கள் ஏற்பட்டன. ஆரியம் இந்தக் காரியங்களைச் செய்வதற்கு தன் கையில் கொண்ட ஆயுதங்கள் வேத—இதிகாச—புராணங்கள் ஆகும்; அதில் மிகக் கூரிய ஆயுதம் இராமாயணமாகும்.

“ இராதா இராமாயணத்தை, ‘கீமாயணம்’ என்று எழுது கின்றன சில பத்திரிகைகள்; இராதா நடத்துவது கீமாயணமல்ல —ஆனால், இராம பக்தர்களும், சீதை நேசர்களும் நடத்துவது தான்—அதுவும் தினம் தினம், வீட்டுக்கு வீடு நடத்துவதுதான் கீமாயணம். கடவுள்களின் பெயரை என்று மனிதர்கள் வைத்துக் கொள்ள ஆரம்பித்தார்களோ, அன்றே கீமாயணம், கிவலீலா, கிந்த புராணம் ஆரம்பமாகிவிட்டது. இலட்சுமணன்—கணவன் பெயர்; ஜானகி—மனைவியின் பெயர்; இது கீமாயணமில்லையா? சுப்பிர மணியம்—கணவன் பெயர்; பார்வதி—மனைவியின் பெயர்; இது கிந்தபுராணம் இல்லையா? கணபதி—அப்பன் பெயர்; பரமசிவம்—மகன் பெயர்; இது கிவலீலா இல்லையா?”

—இவ்வாறு, மதுரை மாவட்ட இரண்டாவது தி. மு. கழக சமூக சீர்திருத்த மாநாட்டில் திறப்புரை ஆற்றுகையில், தோழர் தில்லை வில்லாளன் அவர்கள் குறிப்பிட்டார்.

அவர் பேசியதின் சுருக்கம் வருமாறு:—

மதுரை—தமிழ் வளர்த்த மதுரை; தமிழ் மன்னர்கள் வாழ்ந்த மதுரை; தமிழ்ச் சங்கங்கள் இருந்த மதுரை.

மதுரையில் சீர்திருத்த இயக்கம் வளர்ந்திருக்கிறது; தாங்க முடியாத எதிர்ப்புகளைத் தாங்கியிருக்கிறது—அதுவும், அண்மையில் இராமதாசர்களும், சீதா நேசர்களும் சீர்திருத்த இயக்கத்தை மோதிப் பார்த்த இடமும் மதுரை தான்.

திராவிட சமுதாயத்தைப் பொறுத்த அளவில், அது, ஒரு காலத்தில் வாழ்ந்து, இடைக்காலத்தில் எத்தர்கள் சிலரால் வீழ்ந்து, இன்று மீண்டும் பழைய வாழ்வை அடைய முடியுமா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறது. முப்பதாண்டுக் காலமாக நாம், மீண்டும் பழைய வாழ்வை அடையச் செய்யும் பெரும் பணியிலேயே இருக்கிறோம்.

திராவிட சமுதாயத்தை சாதி, மத, இதிகாச, பல கடவுள்கள் பெயரால் பிரித்துவிட்டார்கள். ‘ஒன்று பட்டால் உண்டு வாழ்வு,’ என்ற உயர்ந்த தத்துவத்தை உணர மறுக்கிறார்கள். ‘ஆயிரம் உண்டிங்கு ஜாதி எனில், அன்னியர் வந்து புகல் என்ன நீதி’ என்று பாரதியார் கேட்டார். ஆனால், ஆயிரம் ஜாதி ஏன் என்று கேட்கவில்லை. ‘பொத்தல்கள் பல உண்டு படகில், தண்ணீர் வந்து புகுந்திடல் என்ன நீதி’ என்று கேட்பது போலத்தானிருக்கிறது.

மதங்களின் பெயரைக் கூறி, மக்களைக் கூறுக்கி, மாட்டுக்கு சூடு போடுவது போல மதக்குறி போட்டுவிட்டார்கள்; ஆளுக்கொரு கடவுள் வைத்துக் கொண்டார்கள்; ‘ஒன்றே குலம், ஒருவனே தேவன்’ என்று வாழ்ந்த இனம், இப்படிச் சீரழிந்து கிடக்கிறது. இந்த நிலையை மாற்றிடவே திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடுகிறது.

அழகாக எழுதப்பட்ட ஒரு படம் இடையில் கவனிக்கப்படாததால், தூசி படிந்திருந்தால், தூசி துடைத்துச் சுத்தப்படுத்திவிடலாம்; ஆனால் பல வர்ணங்கள் கொட்டப்பட்டு கெடுக்கப்பட்டால் புதிதாக எழுதுவது தவிர வேறு வழியில்லை.

கலனான வீட்டை சிறு பழுதுகள் ஏற்பட்டால் திருத்திக் கட்டலாம்; திருத்தவே முடியாத நிலையிலிருந்தால், இடித்துவிட்டு புதுவீடு கட்டிக் கொள்வதுதான் அறிவுடைமையாகும்; அதாவது, இன்றைய நிலையில், திராவிட சமுதாயத்தைச் சீர்திருத்தம் செய்வது சாத்தியமா — அல்லது புதிதாக உருக்கி வார்ப்பது அவசியமா என்ற கேள்விகளே எழுகின்றன.

திராவிட சமுதாயம் கெட்டது என்பதற்கு சரித்திர பூர்வமான காரணம், ஆரியம் கலந்ததுதான்.

திராவிடம்—ஒரு இன மனப்பண்பு; ஆரியம்—ஒரு இன மனப்பண்பு; இவை இரண்டும் முரண்பட்டவை — மாறுபாடானவை. இவை இணைந்ததால் ஏற்பட்ட கோளாறுகள்தான் இன்று திராவிட சமுதாயத்தில் நாம் காணும் கோணல்மாணல்கள். உதாரணத்திற்காக இரண்டொன்றை மட்டும் பார்ப்போம்.

‘ஏற்பது இகழ்ச்சி’ என்பது திராவிடர் நெறி; ஆனால், ‘பிச்சைப் புகினும் கற்கை நன்றே’ என்று கூறி, வேதமோதிகள், பிச்சைத் தொழிலை, தானம் பெறுதல் என்ற முறைப்படி கண்ணியத்திற்குரிய தொழிலாக்கி விட்டார்கள். தாய் பசித்திருக்க, மனைவி துயரால் வாட, மக்கள் துன்பப்பட கண்டாலும், ‘செய்யத் தகாதன செய்யாதே’ என்பது திராவிடர் நெறி; ஆனால், ஆரியம், ‘பசி வந்திடப் பத்தும் பறந்து போம்; பசி வந்திடில் எதை வேண்டுமானாலும், எக்காலத்தும் இருபாலாரும் செய்யலாம்,’ என்கிறது.

இன்னும் சொல்லப்போனால், ஆரியம் இங்கு புகுத்தப்பட்டதே, மத ஏகாதிபத்தியம் செய்த மாபெரும் சூழ்ச்சியாகும். மக்களை, கீழ்மக்களாக மாற்றினால்தான், தனது ஏகாதிபத்தியம் நடைபெறும் என்று முடிவெடுத்து செய்யப்பட்ட துரோகமாகும்.

இப்படி, இதிகாச துணை கொண்டு, திராவிட இனத்தைச் சீரழித்த ஆரியம் நீங்க வழி வகைகளை கூடிப் பேசி ஆராய்ந்து, முடிவெடுத்து, அதன்படி நீங்கள் நடந்திட வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.”

தமிழகமெங்கும் திராவிடர் திருநாள்

சென்னை :

14—1—55 காலை 10 மணிக்கு, எழுகிணறு 9-வது வட்ட தி. மு. கிளைக் கழகச் சார்பில், தோழர் வி. முனுசாமி தலைமையில் நடைபெற்ற பொங்கல் விழாப் பொதுக் கூட்டத்தில், தோழர் செல்வபதி கழகக் கொடியேற்றினர். பின்னர் தோழர்கள் என். வி. நடராசன், கண்ணதாசன், புதுவை மணி, சோழன், மு.சா. இளங்கோ, இராசன் ஆகியோர் சொற்பொழி வாற்றினர்.

* * *

14—1—55 காலை 10 மணிக்கு, தோழர் கா. வி. இராதாகிருட்டிணன் தலைமையில், சென்னை தமிழ் மன்றச் சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

* * *

14—1—55ல் சென்னை-இராயபுரம் முத்தமிழ்க் கலைமன்றச் சார்பில், தோழர் பி. எம். லிங்கேசன் தலைமையில் நடைபெற்ற பொங்கல் விழாவை, தோழர் பி. வி. முத்துசாமி துவக்கிவைத்துச் சொற்பொழிவாற்றினர். பின்னர், காளைகள் பூட்டப்பட்ட 3 வண்டிகளை அலங்கரித்து, இசை முழங்க ஊர்வலம் நடத்தப்பட்டது.

மதுரை :

14—1—55ல், மதுரை 24-வது வட்ட தி. மு. கழகத்தில், தோழர் கே. எஸ். இராசமான் அவர்கள் கழகக் கொடியேற்றினர். தோழர் எம். அய்யாசாமி அவர்கள் ‘திராவிடர் திருநாள்’ என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினர். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

* * *

14—1—55ல், கல்லக்குடி நடராசன் நினைவுப் படிப்பகம் 31-வது வட்ட சார்பில், விழா, தோழர் ப. அழகுராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் கே. எஸ். ராசமான், ‘சமுதாயமும் பொங்கல் விழாவும்’ என்பதைப் பற்றி பேசினர். தோழர் எம். அய்யாசாமி தி. மு. கழகக் கொடியை ஏற்றி வைத்து, ‘பொங்கல் விழாவை ஏன் கொண்டாடவேண்டும்,’ என்பது பற்றி விரிவுரையாற்றினர். சிறார்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

* * *

14—1—55ல், மதுரை 32-வது வட்டம் அனுப்பானடி பாரதிதாசன் படிப்பகச் சார்பில், தோழர் வ. இராமசாமி தலைமையில் திராவிடர் திருநாள் விழா சிறப்பாக நடைபெற்றது. சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. 500-க்கு மேற்பட்ட ஏழைகளுக்கு கஞ்சி ஊற்றப்பட்டது.

* * *

16—1—55 காலை 10 மணிக்கு, மதுரை கோரிப்பாளையம் சிங்கார வேலர் நினைவுப் படிப்பகச் சார்பில்: தோழர் மு. நடராசன் தலைமையில் நடைபெற்ற விழாவின்போது தோழர் சோமநாதன், நடராசன் ஆகியோர் பொங்கல் விழா பற்றி பேசினர். 500 சிறுவர்களுக்குப் பொங்கலும், கரும்பும் வழங்கப்பட்டது காலை 10 மணிக்கு படிப்பகத்தில் கழகக் கொடியேற்றப்பட்டது.

பூலாமேடு :

14—1—55-ல், தோழர் ஆ. இராசாமணி தலைமையில் விழா நடைபெற்றது. தோழர்கள், ஆர். பாலகுருசாமி, பி. சொக்கலிங்கம், ஆர். இராமாநுசம் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் பேசிய பின், பேபி எம். இளங்கோ பெண்கள் சமூகம் முன்னேற வேண்டியதின் அவசியம் பற்றி பேசியதைக் கண்டு அனைவரும் ஆச்சரியத்திலாழ்ந்தனர்.

கீழப்பாவூர் :

14—1—55ல், தி. மு. கழகச் சார்பில், விழா கொண்டாடப்பட்டது. நகரின் பல பாகங்களிலும் கழகக் கொடியேற்றப்பட்டது.

தோலி வட்டம் :

16-1-55ல் திராவிட இயக்கங்கள் சார்பில் விழா கொண்டாடப்பட்டது. போட்டிகள் நடைபெற்றன. பெரும்பான்மையான போட்டிகளில் வெற்றி பெற்றமைக்காக அரு. பஞ்சாபிகேசனுக்கு ‘கிராம வீரன்’ என்ற பட்டம் அளிக்கப்பட்டது. பின்னர் தோழர் வி. எம். எஸ். வேம்பையா தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. ‘பொங்கல் விழாவும் ஆரியாதிக்கமும்’ என்பது பற்றி தோழர்கள் கணபதி, காலசாமி, வைரக்கண்ணு, திருவாரூர் அரங்கராசன் சிறப்புரையாற்றினர். பின்பு சேதுராமன் — பொன்னம்மாள் குழுவினரால் கலா நிகழ்ச்சி நடைபெற்றது.

பேரளம்—ஆலத்தூர் :

14—1—55ல், தோழர் பி. மகாலிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது. தோழர்கள் எஸ். சின்னையன், பி. மணாளன், ஏ. எம். பதி, ஆ. ம. வேலன் ஆகியோர் பேசினர்.

நாச்சியார்கோவில் :

14—1—55 மாலை 5 மணிக்கு தி. மு. கழகத் தோழர்கள் புதிய கழகக் கொடியை ஏற்றி வைத்து, பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினர்.

பாறைப்பட்டி :

16—1—55 காலை 10 மணிக்கு, தி. மு. கழகக் கிளையின் சார்பில், தோழர் இராசாமணி தலைமையில் நடைபெற்ற பொங்கல் விழாக் கூட்டத்தில், தோழர் எம். முத்து அவர்கள் கொடியேற்றி வைத்து, புராண ஆபாசங்களை விளக்கியும், பொங்கல் நாள் கொண்டாடப்பட வேண்டியதின் அவசியம் குறித்தும் பேசினர். பின்னர், அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

திருச்சி—பாலக்கரை :

14—1—55-ல் திருச்சி, எடத்தெரு தி. மு. கிளைக் கழகச் சார்பில், தோழர் க. பி. நாராயணசாமி தலைமையில் விழா நடைபெற்றது. தோழர் தொ. ப. கோபாலகிருட்டிணன் பொங்கல் விழாவின் சிறப்பு பற்றி பேசிய பின், தோழர்கள் தி. ரெ. மதிவாணன், வே. அருணசலம், கே. பி. அரங்கசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இரவு 8 மணிக்கு ஏழைகளுக்குப் பொங்கல் வழங்கப்பட்டது.

மாடக்குளம் :

14—1—55 காலை 10 மணிக்கு முத்து இளைஞர் படிப்பகத்தில் அனைவருக்கும் சர்க்கரை பொங்கல் வழங்கப்பட்டது. அன்று மாலை 5 மணிக்கு படிப்பகத்தில் தோழர் ராமநாதன் அவர்கள் கழகக் கொடியேற்றினர்.

அரிமழம் :

15—1—55ல், தி. மு. கழகச் சார்பில், தோழர் இராசன் தலைமையில் விழா நடைபெற்றது. தோழர்கள் அசோகன், கதிரவன், மீ. சு. இளமுருகு - பொற்செல்வி ஆகியோர் பேசியபின், மூவலூர் மூதாட்டி ஆ. இராமாமிருதம் அம்மையார் திருமணம், திவசம் போன்றவற்றை விளக்கியதுடன், பெண்கள் முன்னேற்றம் பற்றி விரிவாகப் பேசினார்கள். இறுதியில் அரிமழம் தி. மு. க. நடத்திய கால்பந்து, கைப்பந்து, ‘கிரிக்கெட்’, ஓவியம், கட்டுரை முதலிய பொங்கல் விழாப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குத் தோழர் இளமுருகு-பொற்செல்வி பரிசுகள் வழங்கினர்.

ஜி. கல்லுப்பட்டி :

16—1—55ல், தி. மு. கழகத்தினரால் விழா கொண்டாடப்பட்டது. மாபெரும் ஊர்வலம் ஒன்றும் நடைபெற்றது. தோழர் சித்தையன் அவர்கள் கழகக் கொடியேற்றினர். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

க. புதுப்பட்டி :

17—1—55 காலை 9 மணிக்கு தி. மு. கழகச் சார்பில், தோழர் ஆர். கே. கே. சாமி தலைமையில் விழா நடைபெற்றது. காலை 9 மணிக்கு கழகத் தோழர்கள் கைத்தறித் துணி விற்பனை செய்தனர் (தொகை ரூ. 102). பின்னர் பகல் 12 மணிக்கு மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது. ஊரில் பல பாகங்களில் கழகக் கொடி யேற்றப்பட்டது மாலை 2 மணிக்கு ‘மாட்டோட்டம்’ நடத்தப்பட்டது. இரவு 10 மணிக்கு மோகன் கலா மன்றத்தாரால் ‘ஏழையின் கண்ணீர்’ நாடகம் இலவசமாக நடத்திக் காட்டப்பட்டது. தலைவர் தோழர் ஆர். கே. கே. சாமி புராண நாடகங்கள் மக்களுக்குச் செய்த தீங்குகளையும், பகுத்தறிவு நாடகங்கள் மக்களிடையே ஏற்படுத்திய மறுமலர்ச்சியையும் எடுத்துக் கூறினர்.

விளாம்பட்டி :

14—1—55ல், தி. மு. கழகச் சார்பில் பொங்கல் விழாவும், ‘பாண்டியன் படிப்பக’த்தின் திறப்பு விழாவும் தோழர் இ. வா. மா. தங்கராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் பி பி. காளியப்பன் படிப்பகத்தைத் திறந்து வைக்க, தோழர் எஸ். வி. சாமி விழாவை ஆரம்பித்து வைத்தார். ‘பொங்கலன்று திராவிடர்’ என்பது பற்றி தோழர் இ மா. காளியப்பன் பேசினர்.

இராசபாளையம் :

14—1—55ல் தி. மு. கழகச் சார்பில் விழா விமரிசையாக நடைபெற்றது. எல்லோருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது.

கடலங்குடி :

14—1—55 மாலை 6 மணிக்கு, வேலாயுதம் மன்றத்தில் தோழர் ப. அரங்கநாதன் தலைமையில் நடைபெற்ற பொங்கல் விழா கூட்டத்தில், தோழர்கள் ஏ. வைத்திலிங்கம், டி. வி. லிங்கன், சி. ராமதாஸ், ஜெயராமன், கே. ஆர். பி. சிங்கம், என். சி. சேகர், ஆர். பழனிவேலன், பி. குருவைநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர் இனிப்பு வழங்கப்பட்டது.

நாகப்பட்டினம் :

ஜனவரி 14, 15, 16 ஆகிய நாட்களில், தி. மு. கழகக் கட்டிடத்தில் கொண்டாடப்பட்டது. 14—1—55ல், பகுத்தறிவு படிப்பகத்தின் சார்பில் கட்டுரைப் போட்டி நடத்தப்பெற்று வெற்றி பெற்றவர்களுக்கு மூன்று பிரிவு பரிசுகள் வழங்கப்பட்டன. அன்று மாலை தோழர் டி. கே. சீனிவாசன் அவர்களைக்கொண்டு சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது.

15—1—55 காலையில் குறள் விளக்கப் போட்டியும், மாலையில் தோழர் குழந்தையா அவர்களைக் கொண்டு அழகிரி சொற்பயிற்சி மன்றச் சார்பில் சிறப்புச் சொற்பொழிவும் நடைபெற்றது. குறள் விளக்கத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு தோழர் குழந்தையாவால் பரிசுகள் வழங்கப்பட்டது.

16—1—55 மாலை பொதுக் கூட்டம் தோழர் ஜம்பு அவர்களைக் கொண்டு சிறப்பான முறையில் நடைபெற்றது.

தூத்துக்குடி — டுவிபுரம் :

14, 15—1—55 ஆகிய இரு நாட்களிலும், கலைக் கழகச் சார்பில் பொங்கல் விழா நடைபெற்றது. முதல் நாளில் சிறுவருக்கான, விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. சிறுவருக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. மாலை தோழர் டன்லப் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் செல்லப்பா சொற்பொழி வாற்றினர். மறுநாள் கழகத்தோழர்கள் ஒலிபெருக்கியின் உதவியால் இயக்கப் பாடல்களைப் பாடி மகிழ்வித்தனர்.

'போர் தீப்பொறி' புறப்படுகிறதா?

பார்மோசா தீவுகள்மீது தாக்குதல் மும்முரமாகிறது!

பார்மோசா தீவிலிருந்து சியாங் - கே - ஷேக்கின் தேசியச் சீனப் போர் விமானங்கள், டாச்சென் கோஷ்டித் தீவுகளுக்கு அருகாமையிலிருக்கும் கம்யூனிஸ்டுத் தீவான டௌமன் தீவு மீது குண்டுமாரி பொழிந்திருக்கின்றன.

இந்த டௌமன் தீவிலிருந்து தான் செஞ்சீனத் துருப்புகள் டாச்சென் தீவுகளில் உள்ள சிக்கியாங்ஷான் தீவைத் தாக்கின.

எதிர் தாக்குதல்

இத்தாக்குதல் நடைபெற்ற 24 மணி நேரத்துக்குள் 200 செஞ்சீனப் போர் விமானங்கள் இன்று டாச்சென் தீவு மீது கடுமையான குண்டு வீச்சுகளைப் பொழிந்திருக்கின்றன. தாக்குதல் சுமார் 50 நிமிட நேரம் நீடித்தது என்று செய்திகள் அறிவித்துள்ளன.

டாச்சென் தீவு, பார்மோசாவுக்கு சுமார் 200 கல் தொலைவில் வடக்கிலும், செஞ்சீனவுக்கு 20 கல் தொலைவிலும் இருப்பதாகும். இத்தத் தீவு மொத்தம் 8½ மைல் நீளமும், 6½ மைல் அகலமும் கொண்டதாகும். அதன் முக்கியத் தீவான சிக்கியாங்ஷான் 3 சதுர மைல்கள் விஸ்தீரணம் கொண்டதாகும். இத்தாக்குதலின் காரணமாக, சிக்கியாங்ஷானின் முன் வாசல் தகர்ந்து விட்டது என்றே சொல்லலாம்.

மேலும், சிக்கியாங்ஷான் தீவுகளிலிருந்து கொண்டே டாச்சன் இலக்குகள் மீது பீரங்கிப் பிரயோகம் செய்துவிட முடியும் என்றும் கூறப்படுகிறது.

மொத்தத்திலேயே டாச்சென் கோஷ்டித் தீவுகள் 100 சதுர மைல் பரப்பளவு உள்ளவை. கம்யூனிஸ்டு சீனு மீது தாக்குதல் நடத்தவும் அது ஒரு கேந்திர இடம் ஆகும் என்று தேசியச் சீனர்கள் கூறியுள்ளனர். டாச்சென் கோஷ்டித் தீவுகள் மீது செய்யும் செஞ்சீனரின் பெரும் அளவு தாக்குதல்களுக்கெல்லாம் தாங்கள் தயாராகவே இருப்பதாக ஹாங்காங்கிலுள்ள இராணுவப் பார்வையாளர்கள் கருதுகின்றனராம்.

ஐ. நா. சபை நிலைமை—
ஐசன்ஹோவர் கருத்து

"பார்மோசா பிரதேசங்களில் போர் ஏற்படுவதைத் தடுப்பதில் ஐ. நா. சபை தனது செல்வாக்கை உபயோகிக்க வேண்டும்," என்று அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவர் தெரிவித்திருக்கிறார்.

"உலகில் எந்த இடத்திலாவது பலாத்காரச் செய்கைகளோ, சண்டையோ நடைபெற்றாலும், அது உலகின் மற்ற பகுதிகளிலும் பரவிவிடக் கூடிய தீப்பொறி ஒன்றைப் போன்றதாக இருக்கிறது. ஆனால், இவ்விஷயத்தில், ஐ. நா. ஏதாவது செய்ய முடியுமா என்பது பற்றி எனக்கு ஒன்றும் தெரியவில்லை. இந்தப் பிரச்சினையை ஐ. நா. சபை ஆராய்வது நல்லதுதான் என்றும் கம்யூனிஸ்டுகளும் தேசிய சீனர்களும் (சியாங்) அதை தங்கள் சொந்த உள்நாட்டு விவகாரம் என்றுகூட விவாதிக்கக் கூடும்," என்று ஐசன்ஹோவர் மேலும் இது பற்றிக் குறிப்பிடுகையில் தெரிவித்திருக்கிறார்.

உர பேர ஊழல் வழக்கில் தீர்ப்பு

எதிரிகளுக்கு அபராதம் — சிறைவாச தண்டனை

புதுடில்லி, ஜன. 19—

உர பேர ஊழல் வழக்கை விசாரித்த விசேட நீதிபதி குருதேவ் சிங் இன்று, வழக்கின் எதிரிகளுக்குத் தீர்ப்பளித்திருக்கிறார்.

சி. எஸ். டி. சாமி, எஸ். ஒய். கிருஷ்ணசாமி, (ஐ. சி. எஸ்.) ஆர். டி. ஆப்தே, ஆர். வி. ஷா, என். கே. சகானி ஆகிய 5 பேருக்கும் தலா 6 மாதக் கடுங்காவல் தண்டனை விதித்திருக்கிறார்.

நானுவதிக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனையும், ரூ. 10,000 - அபராதமும், அபராதம் கட்ட மறுத்தால் மேலும் 6 மாத கடுங்காவல் தண்டனையும் தரப்பட்டிருக்கிறது. சாமி, கிருஷ்ணசாமி ஆகியோருக்கு தலா ரூ. 5,000 அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் மேற்கொண்டு 6 மாத கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வழக்கின் எதிரிகளுள் ஒருவரான, நானுவதி கம்பெனியிலுள்ள ஸ்டெனோகிராபரான ஆன்வகார் என்பவர் விடுவிக்கப்பட்டார்.

இரண்டாவது உரபேர வழக்கில் சம்மந்தப்பட்டிருந்த கிருஷ்ணசாமி விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

சி. எஸ். டி. சாமிக்கு விதிக்கப்பட்டிருக்கும் 6 மாத கடுங்காவலையும் அவர் ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

சகல வழக்கில் சம்மந்தப்பட்ட எல்லா எதிரிகளையும் ஜாமீனில் விடுவிக்க நீதிபதி அனுமதி கொடுத்தார். ஆனால் லஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்ட சி. எஸ். டி. சாமி சிறைக்கு அனுப்பப்பட்டார்.

சி. எஸ். டி. சாமி என்பவரும், கிருஷ்ணசாமி (ஐ. சி. எஸ்.) என்பவரும் இந்திய சர்க்காரில் முன்னால் இருந்த பெரும் பெரும் அதிகாரிகளாவர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

பிரமாத வரவேற்பாம்!

புதுடில்லி, ஜன. 19—

இந்தியக் குடியரசு தின விழாவில் கலந்து கொள்வதற்காக பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் முகமது, இத்திங்கள் 25-ந் தேதி யன்று டில்லி வரவிருக்கிறாராம். இவருடன் பாகிஸ்தான் அமைச்சர்கள் இரண்டு பேரும் உடன் வருவர் என்றும் தெரியவருகிறது.

இவர்களுக்கு அரசாங்க வரவேற்பு அளிக்கப்படும். ஜனாதிபதி இராசேந்திரர், பிரதமர் பண்டித நேரு, மற்றுமுள்ள அமைச்சர்கள், தூதுவராலய அதிகாரிகள் ஆகியோர், குலாம் முகமதுவை விமான நிலையத்தில் சென்று வரவேற்பார் என்றும் கூறப்படுகிறது.

ஏஜண்டுத் தோழர்களுக்கும், சந்தா நேயர்களுக்கும்

கடந்த 1½ மாத காலமாக, தபால் மூலம் 'நம் நாடு' இதழைப் பெற்றுவந்த ஏஜண்டுத் தோழர்களும், சந்தா நேயர்களும் தங்கள் தங்களுக்கு காலாகாலத்தில் கிடைக்காமலும், சில சமயங்களில் பல நாட்கள் கழித்தும் இதழ்கள் கிடைத்து வருவதாக பலப்பல புகார்க் கடிதங்கள் நமது அலுவலகத்திற்குக் கிடைத்து வந்தன.

நமக்குக் கிடைத்த புகார்களை, சம்பந்தப்பட்ட உயர்தர தபால் இலாகா அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்று, இனிமேல் சென்னை தபால் நிலையத்திலேயே (G.P.O.) நாள்தோறும் ஒப்படைப்பதென்று உத்தரவு வாங்கப்பட்டு விட்டது. தபால் நிலைய அதிகாரிகள் கொடுத்திருக்கும் வாக்குறுதிப்படி, இனி 'நம் நாடு' இதழ்கள் தபால் மூலம் கிடைப்பதில் எத்தகைய காலதாமதமும் நேராது என்று நம்பிக்கை தெரிவிப்பதுடன், 'நம் நாடு' அலுவலகத்திற்கு அநேக முறை புகார்க் கடிதம் எழுதி தொல்லையேற்ற தோழர்கள் அனைவருக்கும் தனித்தனியே எழுதுவதைவிட இதுபோன்ற அறிக்கையே போதுமானதெனவும் நம்புகிறோம்.

பொறுப்பாளர், 'நம் நாடு.'

"நேருவின் சோஷலிச கோஷம்"

"மக்களுக்கு தவருன வழியைக் காட்டுகிறது"

ராம் மனோகர் லோகியாவின் கண்டனம்

"பண்டித நேரு இப்போது பிரச்சாரம் செய்யும் சோஷலிஸ்டு அடிப்படைக் கொள்கையில் நம்பிக்கைகொண்டவர்கள், பிரஜா—சோஷலிஸ்டு கட்சியைவிட்டு வெளியேற வேண்டும்" என்று டாக்டர் ராம் மனோகர் லோகியா கான்பூர்—மான்சா கிராமத்தில் நடைபெற்ற விவசாயிகள் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

"சோஷலிச சமுதாயமென்று நேரு கூறும் கோஷம், தவருன பாதை நோக்கிச் செல்வதாக இருக்கிறது," என்று அவர் மேலும் கூறினார்.

"காங்கிரஸ், முதலாளிகள்—ஏழைகள் இவர்களிடையேயுள்ள கூட்டணியை முறித்தல்தான் விவசாயிகளின் வாழ்க்கை முன்னேறும்; காங்கிரஸ், ஏழைகளிடமிருந்து வாக்குகளையும், முதலாளிகளிடமிருந்து பணத்தையும் பெறுகிறது" என்று லோகியா குறிப்பிட்டார்.

"எதிர்கால இந்தியாவில் முதலாளி என்பதே இருக்கக்கூடாது," என்று அவர் மேலும் கூறினார்.

கான்பூர் சோஷலிஸ்டு இளைஞர் கழகத்தில் அவர் பேசுகையில், "புரட்சிகரமான முறைகள் மூலம் நாட்டில், பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

"சோஷலிசம் பற்றிய நேருவின் பேச்சுக்கள், நாட்டை தவருன பாதை நோக்கி அழைத்துச் செல்கிறது" என்று அவர் குறிப்பிட்டு, இந்தியாவில் சோஷலிசம் வேண்டும் என நேரு விரும்பினால், அவர், இந்த நாட்டில் நிலவும் பேதம், வறுமை, ஏழ்மை இவைகளைப் போக்க வேண்டுமென்றார்.

"இந்தியாவில் 7 கோடி பேர் வேலையில்லாதிருப்பது நாட்டிற்கே பெரிய அவமானமாகும்; வேலையில் இருப்போருக்கும் மிகக் குறைந்த சம்பளமே கொடுக்கப்படுகிறது," என்று அவர் மேலும் கூறினார்.

நேருவின் சோஷலிசம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வென்பதைப் பற்றி நாட்டில் உள்ள பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்; இந்த விளக்கம் மக்களுடைய ஆதரவை காங்கிரசுக்குத் தேடித் தரும்; இப்படிச் செய்யவில்லை என்ருல், நாட்டிலே உள்ள பெரும் பகுதி மக்கள் கம்யூனிச கோஷங்களைக் கேட்டு அதன்பின் சென்றுவிடுவார்கள் என்று நான் அஞ்சுகிறேன்; நாட்டிலே ஒரு பக்கம் தாங்க முடியாத வறுமையும், மறுபக்கம்—ஏராளமான செல்வம் குவிந்துகிடப்பதுமான நிலை காணப்படுகிறது.

இந்த நிலை மிகவும் வெட்கப்படக் கூடியதாகும்; இதை ஒழிக்கப் போகிறோம் என்று மக்களுக்கு நாம் நிச்சயமாகக் கூருவிடில் தீர்மானத்தினுல் பயன் ஏதும் ஏற்படாது," என்று, மேற்கு வங்கத்தைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் சாட்டர்ஜி கூறினார்.

திருமதி ஜேகன் விடுதலை

பிரிட்டிஷ் கயானு விடுதலை இயக்கத் தலைவி

ஜியார்ஜ் டவுன், ஜன. 18—

பிரிட்டிஷ் கயானு விடுதலைக்காகப் போராடி வரும் மக்கள் முன்னேற்றக் கட்சியின் பொதுச் செயலாளரான திருமதி ஜெனட் ஜேகன், ஆம்ஸ்டர்டாம் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, தம் இல்லத்துக்கு சேர்ந்திருக்கிறார் என்று தெரிகிறது.

அந்த அம்மையார், சட்டத்தை மீறி கூட்டங்களில் கலந்துகொண்டதாயும், தடை செய்யப்பட்ட புத்தகங்கள் வைத்திருந்ததாயும் குற்றம் சுமத்தப்பட்டு கடந்த நான்கு மாத காலமாக சிறைவைக்கப்பட்டிருந்தார்.

கடந்த பத்து மாதங்களில் இப்போதுதான் சிறைக்கு வெளியே முதன் முதலாக அந்த அம்மையார் தனது கணவரான செட்டி ஜேகனைச் சந்தித்திருக்கிறார்.

கயானுவின் பிரதமராயிருந்து நீக்கப்பட்ட டாக்டர் ஜேகன், முதலில் 6 மாத சிறைவாசம் செய்தார்.

எதற்காகவோ?

மலேயாவில் உள்ள மூன்று சிவில் விமான தளங்களை இராணுவ விமான தளங்களாக மாற்றுவதற்காக, பிரிட்டிஷ் அரசாங்கம் 15,00,000 பவுன் செலவிட தீர்மானித்திருப்பதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கீகாரம்

பாகிஸ்தான் மந்திரி சபை 'சீட்டோ' ஒப்பந்தத்தை அங்கீகரிப்பது என்று ஒருமனதாகத் தீர்மானித்துவிட்டிருக்கிறதாம்.

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

ஜன. 21: காரைக்குடி
22: திருமங்கலம்
23: தூத்துக்குடி
24: புதியம்புத்தூர்
25: மதுரை
26: சிதம்பரம்

சென்னை 42-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

21—1—55 இரவு 9 மணிக்கு, சென்னை 42-வது வட்ட தி. மு. கழகக் பணி மனையில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது நூல் நிலையம், வரவு-செலவு விபரம், கழக சொந்தக் கட்டிடம் ஆகியவை பற்றி பரிசீலிக்கப்படும்.

பர்மா கம்யூனிஸ்டுகளிடம் வைரச் சுரங்கம் சிக்கியது

அரக்கான் - பர்மா வழி என்று அழைக்கப்படுகிற பண்லோ வழியில், (மயின்பா எனுமிடத்திலிருந்து சுமார் 67 மைல் தொலைவிலிருப்பது) அரக்கான் கம்யூனிஸ்டுகள் ஒரு வைரச் சுரங்கத்தைக் கண்டு பிடித்துள்ளார்களாம்.

இந்தச் சுரங்கத்தில் கிடைத்த ஒரு வைரத்துண்டு செஞ்சீனவுக்கு அனுப்பப்பட்டதில் அது ஏழு லட்சம் 'கயட்' மதிப்பிடப்பட்டதாம்.

இந்தச் சுரங்கத்தை இப்போது கம்யூனிஸ்டுகள் பாதுகாத்து வருவதுடன், அந்தச் சுரங்கத்தில் வைரம் தோண்டும் வேலையையும் ஆரம்பிக்கவிருக்கிறார்களாம்.

பிரிட்டிஷ் பூதத்துவ நிபுணர்கள், அங்கு நிலக்கரி கிடைக்குமா என்று ஆராய்ச்சி செய்ய திட்டமிட்டிருந்ததாயும், ஆனால் இரண்டாம் உலக யுத்தம் துவங்கியதும் திட்டத்தைக் கைவிட்டனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

எஸ். எஸ். எல். சி. பரீட்சை படிப்புத் திட்டம்

சென்னை, ஜன. 20—

உயர் இடைநிலைக் கல்வி (செகண்டரி) மத்திய ஆலோசனைக் குழுவின் கூட்டம் அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற போது, எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்கு இந்தியா முழுவதிலும் ஒரு இணைப்பான படிப்புத் திட்டத்தை வகுப்பதற்காகத் தனியாக ஒரு குழு நியமிக்கப்பட வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறது.

உயர் இடைநிலைக் கல்விப் படிப்பின் இறுதி 3 ஆண்டுகளில் (4—6 பாரங்கள்) எங்கும் ஏறத்தாழ ஒரே மாதிரியான பயிற்சியளிக்க வேண்டுமென்று யோசனை கூறப்பட்டதாகவும், கடைசி வகுப்பை (எஸ். எஸ். எல். சி.) 11-வது வகுப்பு என்று அழைக்க வேண்டுமென்றும், பத்து ஆண்டுகள் தொடர்ந்த படிப்பிற்குப் பின் இந்த வகுப்பை அடையலாம் என்றும், மாநில சர்க்கார்கள் இதற்கான காலத்தை நிர்ணயித்துக் கொள்ளலாம் என்றும் சிபாரிசுகள் செய்யப்பட்டிருக்கின்றனவாம்.

ஏற்றுக்கொண்டார்

கராச்சி, ஜன. 19—

டில்லிக்கு வரும்படியாக பிரதமர் நேரு விடுத்திருந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு அவருக்குப் பதில் தந்துள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் முகமதலி தெரிவித்திருக்கிறார். மார்ச்சு திங்களின் மூன்றுவது வாரத்திலேயே இந்த சந்திப்பு நிகழலாமாம்.

ஆவடி காங்கிரஸ் வடவரின்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"நாட்டின் ஐக்கியத்தைக் குலைக்கும் எந்தவிதமான பிரிவினை மனப்பான்மையையும் தீவிரமான முறையில் எதிர்க்க வேண்டும்" என்ற தீர்மானம் ஏகமனதாக, காங்கிரஸ் விஷயாலோசனைக் குழுவில் நிறைவேறியிருக்கிறது.

தீர்மானத்தை முன்மொழிந்த கோவிந்த வல்லப பந்த் குழைந்து குழைந்து பேசினாராம். தென்னாடு பிரிவினையை எதிர்க்கும் முறையிலும், தென்னாட்டு மக்களின் மனதை மகிழச் செய்யும் முறையிலும் வடக்கே வாழும் மக்கள், தென்னாட்டு மொழி ஒன்றைக் கற்றுக் கொண்டால், இத்தீர்மானத்தின் பயனை அடைய முடியுமென்று தான் எப்போதும் நினைத்ததாகக் கூறினாராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணுதுரை, எம். ஏ.,